
# திராவிடத்தால் வாழ்கிறோம்

962

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

81

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# சென்னையை அதிரச் செய்த தி.மு.கழகம்!

ஓவியம் : சிகரன்




1950-ஆம் ஆண்டு, ஜனவரி 26, இந்தியா, குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த நாள் மகிழ்ச்சிக்குரிய நாள் அல்ல, அதிருப்திக்கு, வெறுப்புக்கு, கண்டனத்திற்கு உரிய நாள் என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. காரணம், "குடியரசு நாள், நமக்கு உரிமை வழங்கும் நாள் அல்ல, நம் உரிமைகளைப் பறிக்கும் நாள். திராவிடரை அடிமைகளாக்கும், ஏகாதிபத்திய பாசிச அமைப்பு நாள்" என்று கருதினார் அண்ணா.

அந்தச் சூழலில்தான், குடியரசு நாளுக்கு 5 நாட்கள் முன்பாக, ஜனவரி 21, 22, 1950-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்னை மாவட்ட முதல் மாநாடு கூட்டப்பட்டது. 'இளம் இதயங்களின் எக்காளம், எழுச்சியுலகின் அணிவகுப்பு, எங்கு நோக்கினும் மக்கள் கூட்டம்' என்று மாநாட்டின் மாட்சி குறித்து, திராவிட நாடு இதழ் விவரித்தது. அந்த விவரிப்புக்கு ஏற்றாற்போல், டிராம் வண்டிகள், பேருந்துகள் என சென்னை நகரில் எங்கும் அன்று தி.மு.க. மாநாடு குறித்தே பேச்சுக்கள் இருந்தன.

சென்னை சால்ட் கொட்டகை'க்கு எதிரில், இம்மாநாடு கூடியது. மாநாட்டுப் பந்தல் அஞ்சா நெஞ்சன் அழகிரியின் கம்பீரத் தோற்றத்துடன், தி.மு.கழகக் கொடிகள் நிரம்ப, பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது. தி.மு.கழகத் தொண்டர்கள் மட்டுமின்றி, கல்லூரி மாணவர்கள், அறிஞர்கள், பெண்கள், மாணவிகள், தொழிலாளர்கள், எந்த அரசியல் கட்சிகளிலும் இல்லாதவர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கூடி, பந்தலை நிரப்பி இருந்தனர்.

மதுரை முத்து மாநாட்டை தொடங்கி வைத்தார். கே.கோவிந்தசாமி, ஏ.எஸ்.இராமன் ஆகியோர் மாநாட்டுச் செயலாளர்களாகவும், சி.வி.இராசன் மாநாட்டின் விளம்பர அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

வரவேற்புரையாற்றிய டி.எம்.பார்த்தசாரதி, "இப்போது மலர்ந்திருப்பது குடியரசு அல்ல. பாசிச அரசு என்று திட்டவட்டமாக தெரிகின்ற காரணத்தினால்தான் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாகிறோம்" என்று பேசினார். மாநாட்டுக்குத் தலைமையேற்ற சேலம் சித்தையன், "குடியரசு விழா என்ற பெயரில் வரும் புதிய அரசியலமைப்பு பொங்கி வரும் காட்டாறு, நமது உரிமைகளைப் பறக்கடிக்கும் சூறாவளி, நம் வாழ்வைப் பிடுங்க வரும் நாகப்பாம்பு" என்று அரங்கம் அதிர, உரை நிகழ்த்தினார். பேரறிஞர் அண்ணா உட்பட கழகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரும் இரண்டு நாட்களும் உரை நிகழ்த்தினர்.

மாநாட்டில் நடைபெற்ற 'வழக்கு வாபஸ்', 'கல்சுமந்த கசடர்', 'சந்திரமோகன்' ஆகிய நாடகங்கள் தொண்டர்களை வெகுவாகக் கவர்ந்தன. திராவிட இயக்க நூல்கள், நாடகங்கள், அச்சகங்களுக்கு தடை போடுவதைக் கண்டித்தும், தொழில்களை தேசியமயமாக்கக் கோரியும், அமெரிக்க மோகத்திற்கு ஆட்பட்டு விடாதீர், டாலர் ஏகாதிபத்தியத்திற்கு இரையாகி விடாதீர் என்று இந்திய அரசுக்கு எச்சரிக்கை, ஆவடி போர் தளவாட கிடங்கை மூடியதற்கு கண்டனம் உட்பட 10 தீர்மானங்கள், இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத, தொலைத்தொடர்புக் கருவிகள் பெரிதும் இல்லாத அந்த காலகட்டத்திலேயே, ஒட்டுமொத்த சமூகத்தையும் பேசுபொருளாக மாற்றுகிற சக்தியாக தி.மு.கழகம் இருந்தது என்பதை நிரூபித்தது இம்மாநாடு.

...கூட்டம் திரளும்

## இளையராஜா- 50 : ஆகச்சிறந்த நிகழ்ச்சி!

இசைஞானி இளையராஜாவுக்கு, தமிழ்நாடு அரசு நடத்திய பாராட்டு விழா, 'ஆகச்சிறந்த நிகழ்ச்சி' என சமூக வலைதளங்களில் பலரும் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக, 'ஸ்ருதி டிவி' கபிலன் எழுதிய பதிவு, பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

சிம்பொனி கலைஞர்களை வரவேற்க, சிறப்புப் பேருந்துகள், அவர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி நேரில் சென்று, சிறப்பு விருந்து மற்றும் பரிசுகளை அளித்தது, சிம்பொனி இசை நிகழ்ச்சியின்போது, வெளியிடப்பட்ட குறும்படம் என, விருந்தோம்பலின் உச்சமாக இருந்தது.

நிகழ்ச்சி மாலை 5.30 மணிக்கு தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. முதல்வர் சரியாக 5.10 மணிக்கு நேரு ஸ்டேடியம் வந்ததுடன், நேரடியாக அரங்கத்துக்குள் செல்லாமல் முதலில் சிறப்பு விருந்தினர் அறைக்குச் சென்று, கமல், ரஜினியை சந்தித்ததுடன், அடுத்து இளையராஜாவின் அறைக்குச் சென்று, அங்கிருந்து கிட்டத்தட்ட 100 மீட்டர் தூரம் நடந்தே அவரை அழைத்து வந்தார்.

முன்பெல்லாம் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்தால், ஆளுங்கட்சிக்கு நெருக்கமான ஒரு சேனல் மட்டும் எக்ஸ்க்ளூசிவ் (exclusive) எடுத்து ஒளிபரப்பும், அல்லது பிரபல தொலைக்காட்சிக்கு உரிமையளித்து விடுவார்கள்.

ஆனால், இளையராஜா நிகழ்ச்சியை அனைத்து சேனல்களும் ஒளிபரப்பும் வசதி தலைமைச் செயலகத்தில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

டிஜிட்டல் மீடியாக்களுக்கான செய்தித்துறை YouTube சேனலில் logo இல்லாமல், முழுமையான படப்பதிவாக (pure raw out) கொடுக்கப்பட்டது. அதிலும், முதல்வரின் படமோ, நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு பேனரையோ வீடியோ மீது வைக்காமல் அளித்தனர். 'இப்படியான ஏற்பாடுகளுக்கு நன்றி முதல்வரே' என குறிப்பிட்டுள்ளதுடன், "கலைஞரின் மகன் நடத்தும் அரசு, ஒரு இசை கலைஞருக்கு விழா எடுக்கவில்லை என்றால்தான் ஆச்சர்யம்" என நெகிழ்ச்சியாகப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





அருள்செல்வன் ராமதாசன்

### என்னை இயக்கும் புகைப்படம்!

என் தந்தை, மறைந்த உட்கோட்டை ராமதாசன் அவர்கள், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் கழகத்தின் மூத்த முன்னோடி. மாவட்டப் பிரதிநிதியாக இருந்தார். இந்தப் படம், கழக நிகழ்ச்சிக்காக பேராசிரியர் அவர்கள் சிதம்பரம் வந்திருந்தபோது நிர்வாகிகள் சந்திப்பில் எடுக்கப்பட்டது. அவரது நினைவையும், கழக நினைவுகளையும் சொல்லும் படமாக எனது கழகப் பயணத்தில் துணை நிற்கிறது.

-அருள்செல்வன் ராமதாசன்,
கிளைச் செயலாளர், உட்கோட்டை,
ஜெயங்கொண்டம் ஒன்றியம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

81

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தீயைத் தாண்டிய நினைவுகள்!

'அன்றொரு நாள்-ஆம். 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் சிங்காரச் சென்னையிலே தளபதி அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவிலே கண்ணீர்த் துளிகளைச் சிந்தினார், வார்த்தைகளைச் சிந்துவதற்குமுன்", கழகம் தொடங்கப்பட்ட இரண்டே ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய, 'இதய பேரிகை' எனும் நூலில் இடம்பெற்றிருக்கும் வரிகள் இவை.

கழகம் முப்பெரும் விழாவை, கரூரில் கொண்டாடவிருக்கும் தருவாயில், ஆரம்பகால அடக்குமுறைகளை எதிர்கொண்ட நினைவுகளைத் தொகுப்பாக கொண்டிருக்கும் இந்நூல் கழகத்தவர் அனைவராலும் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று. 1951-ஆம் ஆண்டு வெளியான இந்நூலை, 'கலைப்பூங்கா பதிப்பகம்' வெளியிட்டுள்ளது. தமிழ் இணைய கல்விக் கழகத்தின் மின் நூலகத்தில் இலவசமாகப் படிக்கக் கிடைக்கிறது.




வெறும் தகவல்களைக் கொண்ட கட்டுரைகளாக மட்டுமல்லாமல், இலக்கிய வளம் கொண்ட கச்சிதமான மொழிநடையில் அமைந்த படைப்புகளாக இவை திகழ்கின்றன. கழகம் தொடங்கப்பட்ட முதல் இரண்டு ஆண்டுகளில், சந்தித்த முக்கியமான நெருக்கடிகளை எல்லாம் பதிவு செய்துள்ளது இந்நூல்.

மாவட்டந்தோறும் மாநாடுகள் நடத்தி, கிளைக் கழகங்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, ஆயிரக்கணக்கில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, அறப்போராட்டங்கள் பல மேற்கொண்டு, மக்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்த கழகம், படிப்படியாக வளர்ந்த செய்திகளை, இந்நூல் நமக்கு கவனப் படுத்துகிறது.

பேரறிஞர் அண்ணாவின் 'நீதி தேவன் மயக்கம்' நாடகமாக நிகழ்த்தப்பட்டபோது, அதற்கு அன்றைய பிற்போக்கு மனம்கொண்ட 'வீதி தேவர்கள்' எழுப்பிய எதிர்ப்புகளையும், கழகம் உறுதியுடன் அவற்றை எதிர்கொண்டதையும், ஒரு கட்டுரையில் பதிவு செய்கிறார் கலைஞர்.

அரசியல், சமூகத் துறைச் சீர்திருத்தங்கள் மட்டுமின்றி, இலக்கியத்திலும் பல்வேறு புரட்சிகளைக் கழகம் மேற்கொண்டு வருவதை, கம்ப இராமாயண விமர்சனத்துடனும் சிலப்பதிகாரம் மற்றும் திருக்குறளின் மகத்துவத்தைச் சுட்டிக்காட்டியும் மூடக்கொள்கைகளை, வேரோடு சாய்த்துப் புதுவழி காணத்தான் அறிவியக்கம் பணியாற்றி வருகிறது என்பதை, நிறுவியும் எழுதப்பட்டுள்ளது ஒரு கட்டுரை.

எழுத்து-பேச்சு-நாடகம்-கூட்டம் நடத்துதல் என அத்தனை உரிமைகளும் நசுக்கப்பட, கழகத்தின் வளர்ச்சி மட்டுமே காரணமாக இருந்திருக்கிறது. பேச்சுரிமையை முடக்க கொண்டுவரப்பட்ட முதல் அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மீதான விமர்சனமாக இக்கட்டுரை விளங்குகிறது.

இந்தியா, அரசியல் விடுதலை பெற்றபிறகு, நிலவிய அரசியல் பொருளாதார நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, சுதந்திர அன்னை இதை எல்லாம் நேரில் கண்டால் என்ன எண்ணி இருப்பார் என்பதையும், கற்பனையாக உருவகித்து எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒன்றும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

பவள விழா ஆண்டை நிறைவு செய்யும் தி.மு.கழகத்தின் தீரம் நிறைந்த முதல் இரண்டாண்டுகளில் நடைபெற்ற முக்கியமான அரசியல் நிகழ்வுகளை, முத்தமிழறிஞர் கலைஞரின் கைவண்ணத்தில் கொண்டிருக்கும் இந்நூல் கழக வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஆவணம்!

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### நகர்மன்றத் தேர்தல் ஈடுபாடு!

1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னர், ஏப்ரல் 14-ஆம் தேதி, குளித்தலையில் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், தி.மு.கழகத்தின் சார்பில், மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம், ஆகியவற்றிற்கான தேர்தல்களில் ஈடுபடுவதற்கான வழிவகை குறித்து, ஆவன செய்யுமாறு பொதுச்செயலாளரை அந்தப் பொதுக்குழு கேட்டுக்கொண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131